# திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரங்களில் வெளிப்படும் புராண இதிகாசக் கருத்துக்கள்

**ச. நிஷாந்தினி[1], து. தீபா அர்ச்சனா[2]**
[1,2]மொழித்துறை, இலங்கை தென்கிழக்குப்பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககாலம் தொடக்கம் சோழர் காலம் வரையிலான தமிழ் பக்தி இலக்கியங்களை இராஜராஜ சோழன் நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு சோழர் காலத்தில் தொகுப்பித்தார். இறையருள் பெற்ற அருளாளர்களால் இயற்றப்பட்ட இறைவனைப் போற்றித் துதிக்கும் திருத்தமிழ் பாடல்கள் பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. பன்னிரு திருமுறையில் உள்ள இறையருட் பாடல்கள் யாவும் சிவபிரானையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு பாடப்பட்டுள்ளமையால் சைவத் திருமுறைகள் என்றும் பெயர் பெறுகின்றது. பூவாரம் சூட்டி வேதநாயகனைப் போற்றினால் விரைவில் வாடிவிடுமென்று தேவாரம் பாடிப் பரவியவர்கள் தேவார மும்மூர்த்திகள். அதில் சம்பந்தர் என்று அன்புடன் குறிக்கப்படும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரத் திருப்பதிகங்கள் சைவத் திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக இடம்பெறுகின்றன. புராண இதிகாசங்களிற்கு இந்து மதத்தில் சிறப்பானதொரு இடம் உண்டு. புராணங்களிலே பல சமயக் கதைகள் இணைக்கப்பட்டிருப்பதோடு பஞ்சலக்கணங்களையும் கொண்டிருக்கும். புராண இதிகாசங்கள் விளக்குகின்றன. அத்தகைய சிறப்புக் கொண்ட புராண இதிகாசங்கள் பற்றி சம்பந்தர் தன் திருப்பாடல்களில் கூறியுள்ளார். அந்தவகையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் தேவாரத்தில் உள்ள புராண இதிகாசக் கதைகளை எடுத்துக் கூறுவதே இவ்வாய்வின் நோக்கமாகும். திருமுறைகளில் சம்பந்தரின் தேவாரங்கள் ஆய்வின் எல்லையாகக் கொள்ளப்படுகின்றன. ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு, விபரணவியல் ஆய்வு முறை கையாளப்பட்டுள்ளது. இதன் பொருட்டு சம்பந்தரின் தேவாரப் பதிகங்கள், புராண இதிகாசங்கள் என்பன இவ்வாய்வின் இரண்டாம் நிலைத் தரவுகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள செய்திகள், பிற ஆக்கங்கள் என்பன இவ்வாய்வின் துணைத் தரவுகளாக அமைகின்றன. இறுதியாக இவ்வாய்வானது சம்பந்தர் தனது தேவாரத்தில் சிவனின் சிறப்புக்களை கூற இதிகாசப் புராணங்களை சிறப்பாக கையாண்டுள்ளார் என்பதை முடிவாக உரைக்கும்.

**திறவுச்சொற்கள்:** திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், சிவன், புராணம், இதிகாசம், சம்பந்தர் தேவாரம்

## அறிமுகம்

"வெந்தழல் நீராமால் வெள்ளெலும்பு பெண்ணாமால்
வந்த மதவேழம் வணங்குமாம் - சந்தமெழப்
பாடுவார் உள்ளுருகிப் பாடுந் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்"

எனத் தேவாரங்களின் பெருமையை நினைத்து தேசிகவிநாயகம் பிள்ளை பாடுகின்றார். இவ்வாறு நெருப்பை நீராக்கியும் எலும்பை பெண்ணாக்கியும் யானையை பணியச் செய்ததும் தமிழ் பாடல்களேயாகும். பன்னிரு+திரு+முறை பன்னிரு திருமுறை எனப்பட்டது. இதில் 'பன்' என்பது பத்தையும் 'இரு' என்பது இரண்டையும் குறிக்கும். ஆகவே 'பன்னிரு' என்பது பன்னிரெண்டு எனப் பொருள்படும். 'திரு' என்பதற்கு தெய்வத்தன்மையின் திருஅருட் செல்வம் என்று பொருள்படும். 'முறை' என்றால் நூல், கூட்டு, ஒழுங்கு என்று பொருட்படும். ஆகவே 'திருமுறை' என்பது தெய்வத்தன்மையான நூல் எனப் பொருள்படும். திருமுறைகள் பன்னிரெண்டு ஆகும். பன்னிரு திருமுறைகளில் ஒன்று தொடக்கம் ஏழு வரையான திருமுறைகளை 'தேவாரம்' அல்லது 'அடங்கன் முறை' என அழைப்பர். தேவாரம் என்ற சொல்லில் 'தே' என்பது ஓரெழுத்தொரு மொழியாகத் தெய்வம் என்னும் பொருளைச் சுட்டும். 'வாரம்' என்பது இசைக் கூற்று எனப்படும். அத்துடன் தெய்வப் பாடலையே 'வாரம்' என அழைப்பர். எனவே தேவாரம் என்பது தெய்வத்தன்மையான இசைப்பாடல்கள் ஆகும். மேலும் தேவர்களிற்கு சூட்டப்படும் மாலை என்றும் தேவாரத்திற்கு பொருள் கொள்ள முடியும். இறை வழிபாட்டில் பாடப்பட்டமையால் மூவர் பாடல்களும் தேவாரம் என வழங்கப்படுகின்றது. இதில் ஒன்று தொடக்கம் மூன்று வரையான தேவாரப் பாடல்கள் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டதாகும். 4158 பாடல்கள் அதில் அடங்குகின்றன. சங்கமருவிய காலத்தில் நலிவுற்றிருந்த சைவ சமயத்தை புத்துயிர் செய்யும் நோக்கில் நாயன்மார்களால் சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனின் பெருமைகளையும் புகழையும் கூறும் பாடல்கள் பாடப்பட்டது. அதில் சிவனின் தோற்றப் பொழிவுகள், பெருமைகள், சிறப்புக்கள் என்பன திறம்பட கூறப்பட்டிருப்பதோடு புராண இதிகாசக் கதைகளும் இடம்பெற்றுள்ளன.

அந்தவகையில் புராணங்கள் பற்றி நோக்கினால், புரா+தனம் - புராணம் என்றாயிற்று. புராணம் என்பது பழைமை என்ற பொருளில் 'முன்னே நடந்தது' எனப் பொருள்படும். புராணங்கள் பதினெட்டு ஆகையால் அவற்றைப் 'பதினெண் புராணங்கள்' என்பர். அதில் சிவபுராணங்கள் பத்தும் விஷ்ணுப் புராணம் நான்கும் பிரம்ம புராணம் இரண்டும் அக்கினி புராணம் ஒன்றும் சூரியப் புராணம் ஒன்றும் அடங்குகின்றது. அடுத்து இதிகாசம் பற்றி நோக்கினால், இதி+ஹ+அச எனப் பிரிந்து 'இது இப்படி நடந்தது' என்று பொருள் கொள்வர். மேலும், 'இப்படி நடந்தது என்ன ஆச்சரியம்', 'வரலாறு' என்றும் இதிகாசத்திற்கு பொருள் கூறுவர். இதிகாசங்கள் என்ற வகைப்பாட்டினுள் இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் என்பன அடங்கும். எனினும் சிவரகசியம் இன்று வழக்கினில் இல்லை. சமயக் கதைகளை தொகுத்து கூறும் நூல்களாக புராணங்களும் இதிகாசங்களும் காணப்படுகின்றன.

சைவ சமய குரவர்களுள் முதல்வராக வைத்து எண்ணப்படும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தனது திருமுறைப் பாடல்களில் பல இடங்களில் இதிகாசப் புராணங்களின் கதைகளை சுட்டிக்காட்டியிருப்பதைக் காணலாம். சிவனது பெருமைகளையும் சிறப்புக்களையும் முன்வைக்கும் நோக்கிலேயே இவ்வாறான முறையை சம்பந்தர் கையாண்டுள்ளார்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு நோக்கத்தினை அடைந்து கொள்ளும் பொருட்டு, விபரணவியல் ஆய்வு முறை கையாளப்பட்டுள்ளது. இதன் பொருட்டு சம்பந்தரின் தேவாரப் பதிகங்கள், புராண இதிகாசங்கள் என்பன இவ்வாய்வின் இரண்டாம் நிலைத் தரவுகளாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வுடன் தொடர்புடைய ஏனைய ஆய்வுக்

கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தள செய்திகள், பிற ஆக்கங்கள் என்பன இவ்வாய்வின் துணைத் தரவுகளாக அமைகின்றன.

**பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்**

திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பதிகங்களில் உள்ள புராண இதிகாசக் கதைகளை பின்வருமாறு நோக்க முடியும். அதில் முதலாவதாக சம்பந்தரின் தேவாரங்களில் உள்ள புராணக் கதைகள் பற்றி நோக்குவோம்.

**01. சிவபெருமானின் அட்டவீரச் செயல்கள் கூறப்பட்டுள்ளது.**

சிவபெருமானின் எட்டு வீரச் செயல்களே 'அட்டவீரச் செயல்கள்' எனப்படும். இவை பற்றி புராணங்கள் கூறுகின்றது. சிவனின் அட்டவீரச் செயல்கள் தமிழ் நாட்டிலுள்ள அதிகை, பறியலூர், குறுக்கை, உழுவூர், விற்குடி, கடவூர், கோலூர், கண்டியூர் என்ற வெவ்வேறு தலங்களில் நடைப்பெற்றதாகக் கூறப்படுகின்றது. சிவபெருமானின் அட்டவீரச் செயல்களாவன,

i. திரிபுரம் எரித்தல்
ii. தக்கன் வேள்வி தகர்த்தியமை
iii. காலனை காலால் உதைத்தமை
iv. காமனை எரித்தமை
v. பிரம்மன் சிரத்தை அறுத்தமை
vi. யானையின் தோலை உரித்தமை
vii. அந்தகாசுரனைச் சங்கரித்தமை
viii. சலந்தரனைத் தண்டித்தமை

இவ்வீரச் செயல்களை சிவபிரான் ஆற்றிய போது திரிபுராந்தகன், தகச்சாரி, காலச்சங்காரன்,காமாந்தகன், பிரம்மரச்சதனன், கஜாரிக கஜாந்தகன், அந்தகாரி, ஜலந்தராரி என்னும் மூர்த்திகளாக இருந்தார்.

**i. திரிபுரம் எரித்தல்**

தேவர்களை காக்கும் பொருட்டு சிவபெருமான் திரிபுரங்களையும் தனது புன்னகையால் எரித்தார். அதை சம்பந்தர்,

"இரும்பொன் மலைவில்லா எரியம் பாநாணில் திரிந்தபுரமூன்றுஞ் செற்றா னுறைகோயில்"[1]

"புரமூன்றுமெய் துபுன வாயிலில் இருந்தவன்"[2]

ஆகிய வரிகளில் குறிப்பிட்டுள்ளார்.

சிவபெருமான் மேரு மலையை வில்லாகவும் வாசுகி என்ற பாம்பை நாணாகவும் அக்கினியை அம்பாகவும் கொண்டே முப்புரத்தை அழித்தார் என்பதை,"சாகம் பொன் வரையாக","வாசுகி நாண்","அனல் வாளி" ஆகிய வரிகளினூடாக வெளிப்படுத்தியுள்ளார். சூரிய சந்திரர்களை தேர் சக்கரங்களாகவும் பிரம்மாவை சாரதியாகவும் வேதங்கள் நான்கையும் குதிரைகளாகக் கொண்டும் போர் செய்தார் என்பதை,

"வானோர் எல்லாம் ஒருதேராய் அயன் மறைபூட்டிநின்று உய்ப்ப வல்லாய் எரி"

"யுலகங் ளேழு முடனே மறைதரு வெள்ளமேறி வளர்கோயில் மன்னி"[3]

என்ற வரியில் விளக்கியுள்ளார்.

**ii. தக்கனின் வேள்வியை தகர்த்தியமை**

தக்கனின் வேள்வியை அழித்தது தொடர்பாக சம்பந்தர் மேல்வருமாறு கூறியுள்ளார்,

"தக்கன் வேள்வி தகர்த்தவன்"[4]

"தக்கன் வேள்வி தகர்த்தரு ளாலவாய்ச்"[5]

"ஒருக்கமுன் னினையாத் தக்கன்றன் வேள்வி
யுடைதர வுழறிய படையான்"[6]

சிவபிரான் வீரபத்திரராகத் தோன்றி தக்கனது தலையை அறுத்தார். அதை சம்பந்தர்,

“தக்கன்றன சிரமொன்றினை யரிவித்தவன் றனக்கு”[7]
“தக்கனார் தலையறிந்த சங்கரன்”[8]
“தக்கனைத் தலையரி தழலுருவர்”[9]
ஆகிய பாடல் வரிகளின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். மேலும், தக்கனின் வேள்வியில் தண்டனைக்குள்ளான அக்கினி, சூரியன், சந்திரன், இந்திரன், பிரம்மன், சரஸ்வதி முதலியோரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
“தக்கனது பெருவேள்விச் சந்திரன் இந்திரன் எச்சன் அருக்கன் அஞ்சிமிக்க
விதாதவினோடும் விதிவெளியே தண்டித்த விமலர்”[10]

### iii. காலனை காலால் உதைத்தமை

தனது பக்தனான மார்க்கண்டேயரை காக்கும் பொருட்டு சிவன் காலனை காலால் உதைத்த கதை பற்றி சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.
“அன்றடற் காலனைப் பாலனுக்காய்ப் பொன்றிட வுதைசெய்த புனிதன்”[11]
“காலனை முன் செற்றுகந்தீர்”[12]
“காலனை யுயிர்கொண்ட கயிலையாரும்”[13]
என காலனை காலால் உதைத்தமை பற்றி கூறுகின்றார்.

### iv. காமனை எரித்தமை

சம்பந்தரின் காலத்தில் சைவசமயத்திற்கு போட்டியாக சமணமும் பௌத்தமும் காணப்பட்டது. இவ்விரு மதங்களும் காமத்தை வெறுத்து துறவறத்தை போற்றி பிரசாரம் செய்தது. காமத்தை களையாதவர்கள் இறையடி சேரமாட்டார்கள் என்ற கருத்துக்களை முன்வைத்து சமணமும் பௌத்தமும் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இச்சமயத்தில் சம்பந்தர் சிவன் காமனை எரித்த கதையை தன் பாடலில் பாடி சிவபெருமான் காமத்தை களைந்தார் என்ற கருத்தை மக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச் செய்தார்.
தேவர்களின் வேண்டுகோளின் படி மன்மதன் சிவனிடம் காமத்தை தூண்ட வந்தார் என்பதையும் பார்வதி தேவியை சிவபிரான் மணந்து கொள்ளும் படி செய்வதற்காகவே காமன் காமத்தை தூண்ட வந்துள்ளான் என்பதையும்,
“விண்ணவர்கள் வெற்பரசு பெற்ற மகள் மெய்த்தேன்
பண்ணமரும்மென் மொழியினாளைய னைவிப்பான் எண்ணிவரு காமன்”[14]
என்ற வரியில் குறிப்பிட்டுள்ளார். சிவன் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து காமனை எரித்தார் என்பதை,
“காம தேவனை வேலக் கனலெரி கொளுவிய கண்ணார்”[15]
“காமனை மங்கவெங்க ணால்விழித்த”[16]
ஆகிய வரிகளில் எடுத்துரைத்துள்ளார்.

### v. பிரம்மன் சிரத்தை அறுத்தமை

மும்மூர்த்திகளின் ஒருவரான பிரம்மா சிவனிடம் பொய் உரைத்ததன் காரணத்தால் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றை சிவன் கொய்து விடுகின்றார். இதை,
“ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த சந்தவெண் பொடியணி சங்கரனே”[17]
“ஆர்த்தவன் நான்முகன் தலையையன்று
சேர்த்தவ னுறைவிடந்”[18]
எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும்,
“ஈடக மானநோக்கி யிடும்பிச்சை கொண்டு படுபிச்ச னென்று பரவத்”[19]
என்ற வரிகளில் பிரம்மாவின் கொய்யப்பட்ட தலையே சிவபிரானிற்கு பிச்சையோடாகப் பயன்பட்டது என்பதை விளக்கியுள்ளார்.

### vi. யானையின் தோலை உரித்தமை

தாருகாவனத்து இருடிகள் சிவன் மீது கோபம் கொண்டு யாகத் தீயில் தோன்றிய யானையை சிவபெருமானிற்கு எதிராக ஏவிய போது யானையைக் கொன்று அதன் தோலை உரித்து போர்வை எனக் கொண்டார். இதை சம்பந்தர்,
"நிழல்திகழ் மழுவினை யானையின்தோல்
ஆழல்திகழ் மேனியி லணிந்தவனே"[20]
"கரியி னுரிதோலார்"[21]
"யானையின் ஈரமாகிய வுரிவைபோர்த் தரிவை"[22]
"மத்த மதக்கரியை மலையான்மக ளஞ்சவன்று கையால்
மெத்த வுரித்தவெங்கள் விமலன்"[23]
என்று பாடியுள்ளார். மேலும், யானைத் தோலை சிவன் போர்த்தியதும் உமை அதைக் கண்டு அஞ்ச சிவபிரான் அச்சத்தை தீர்க்க நடனமாடினார் என்பதை,
"மத்தக் களிற்றுரி போர்த்தக்கண்டு மாதுமைபேதுறலும் சித்தந்தெளிய நன்றாடி"[24]
என்ற வரியில் புலப்படுத்தியுள்ளார்.

**vii. அந்தகாசுரனைச் சங்கரித்தமை**

சிவன் தனது சூலாயுதத்தைக் கொண்டு அந்தகாசுரனை வதம் செய்தமை பற்றி சம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.
"அமரராவைர ஏத்த தன்னைச் சூலத்தில் ஆய்ந்ததே"
"அறையார்கழல் அந்தன்தனை அயில்மூவிலை
அழகார் கறையாநெடு வேலின் மிசை ஏற்றான்"[25]

**viii. சலந்தரனைத் தண்டித்தமை**

பூலோகத்தையும் விண்ணுலகத்தையும் துன்புறுத்திய சலந்தரனின் தலை அறுந்து விழுமாறு செய்ய சக்கராயுதப் படையைத் திருமால் பெறுவதற்கு அருள் புரிந்தார் என சம்பந்தர் பாடியுள்ளார்.
"தரையொடு திவிதல நலிதருதகுதிறல்
உறுசலதரனது வரையன தலைவிசை யொடுவரு
கிரியை அரிபெற அருளினன்"
"தன்றவம் பெரிய சலந்தர னுடலந்
தடிந்தசக் கரமெனக் கருளென்
றன்றரி வழிபட் டிழிச்சிய விமானத்"[26]

**02. கங்கையை பூமிக்கு கொணர்ந்த கதை கூறப்பட்டுள்ளது**

இந்து மதத்தில் கங்கை நதி புனிதமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. கங்கையில் நீராடினால் செய்த பாவங்கள் தீரும் என்பார்கள். இறந்தவர்களின் சாம்பலை கங்கையில் கரைக்கும் வழக்கம் இந்துக்கள் மத்தியில் உள்ளது. கங்கையை சிவபெருமானின் மனைவி என்றும் மகாபாரதத்தில் வரும் பீஷ்மரின் தாய் என்றும் கூறப்படுகின்றது. பகீரதன் என்பவன் தன் மூதாதையர்கள் சாபத்தால் இறந்த செய்தி கேட்டு அவர்கள் நற்கதி அடைய வேண்டும் என்ற நோக்கில் கங்கையை நோக்கி தவம் இருந்து கங்கையை பூமிக்கு கொண்டு வருகின்றான். பூமிக்கு வந்த கங்கை தன் பிரவாகத்தை கட்டுப்படுத்துவதற்காக சிவனை நோக்கி தவம் புரியுமாறு பகீரதனிடம் கூறவே அவனும் தவம் செய்கின்றான். சிவனும் கங்கையின் வேகத்தை தாங்கிக் கொண்டு கங்கையை தன் தலையில் வைத்துக் கொள்கின்றார். இதை சம்பந்தர் தனது பதிகத்தில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.
"பழித்திங்கள் கங்கை சடையிடை வைத்துப்"[27]
"கங்கைபொங்கு செஞ்சடைக் கரந்தகண்டர்"[28]
"அலைபுனற் கங்கை தங்கிய சடையா"[29]

**03. அடிமுடி தேடியக் கதை கூறப்பட்டுள்ளது**

பிரம்மாவிற்கும் விஷ்ணுவிற்கும் தன்னில் யார் பெரியவர் என்ற சண்டை ஏற்பட்ட போது சிவன் ஜோதிப் பிளம்பாய் தோன்றிய கதையை சம்பந்தர் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளார்.

“ஆதியாய நான்முகனு மாலுமறி வரிய சோதியானே”[30]
“அருவரை பொறுத்த ஆற்றலி னானு
மணிகிளர் தாமரை யானும் இருவரு
மேத்த எரியுரு வான இறைவனா”[31]
சிவனின் ஜோதிப் பிளம்பின் அடியைத் தேட விஷ்ணு பன்றி வடிவம் எடுத்து நிலத்தைக் குடைந்தும் பிரம்மா அன்னப்பறவை வடிவம் எடுத்து வானை நோக்கியும் பறந்ததை,
“மாலும் மலரினோனும் பன்றியும் வென்றிப் பறவையாயும்”[32]
என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**04. நஞ்சுண்ட கதை கூறப்பட்டுள்ளது**

முப்பத்து மூன்று கோடி தேவர்களும் அறுபத்து ஆறு கோடி அசுரர்களும் தம்முள் ஒன்று கூடிப் பகைத்துப் போர் புரிந்தனர். அப்பொழுது இருதிறத்திலும் பலர் இறந்தனர். பாற்கடலில் கலந்த நஞ்சை எடுத்து தொடர்ந்து அளவில்லாத காலம் உயிர் வாழவும் பாற்கடலை கடைய ஆரம்பித்தனர். பாற்கடலை கடைவதற்கு மந்தர மலையை மத்தாகவும் வாசுகி என்ற பாம்பை கயிறாகவும் கொண்டு கடைந்தனர். கயிறாகப் பயன்பட்ட வாசுகி பொறுக்கலாற்றாது விடத்தை உமிழ்ந்தது. உலகை காக்கும் பொருட்டு சிவபெருமான் அந்நஞ்சை தாமே அருந்தினார். அதை சம்பந்தர் மேல்வரும் பாடலில் விளக்குகின்றார்,
“பெருகும்புன லண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவராது பருகிக்”[33]
“உண்ணலாக நஞ்சுகண்டத் துண்டுடனே யொடுக்கி”[34]
“கண்டநஞ்ச மடக்கினை”[35]
“ஆழியுள் நஞ்சமு தாரவுண்டன்”[36]
சிவன் நஞ்சை உண்டதும், உமை சிவனின் கழுத்தை பிடிக்கவே நஞ்சு கழுத்தில் தங்கியமையால் சிவனின் கழுத்து நீல நிறமாக மாறியது. இதனால் சிவனை நீலகண்டன், நஞ்சுண்ட கண்டன், கறைமிடற்றண்ணல் எனவும் அழைப்பர். இதனை சம்பந்தர்,
“கறுமலர் கண்டமாக விடமுண்ட காளை”[37]
“கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே”[38]
எனக் கூறுகின்றார்.

**05. கல்லால மர நிழலில் அறமுரைத்தமை**

சனகர், சனாதரர், சனந்தர், சனற்குமாரர் ஆகிய நால்வரிற்கும் ஞானத்தை அளிக்கும் பொருட்டு சிவன் ஞான நிஷ்டையில் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்தார். இந்த மூர்த்தத்தை ‘தட்சணாமூர்த்தி’ என்பர். இதை சம்பந்தர் தனது பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார்.
“சழிந்த சென்னிச் சைவவேடம் தாளிணைத்து ஐம் புலனும்
அழிந்த சிந்தை அந்தணளெர்க்கு அறம் பொருள்இன் பம்வீடு
மொழிந்த வாயான்”[39]
கல்லால மரத்தின் கீழிருந்தே ஞானம் போதித்தார் என்பதை,
“கல்ஆல் நிழல் கீழாய்”[40]
என்ற வரிகளில் புலப்படுத்தியுள்ளார்.

**06. அர்த்தநாரீஸ்வரர் பற்றிய கதை கூறப்பட்டுள்ளது**

உமையின் தவத்தில் மகிழ்ந்த சிவன் தன் உடலின் ஒரு பாகத்தை உமைக்கு கொடுக்கின்றார். உமையும் சிவனும் இணைந்த வடிவம் ‘அர்த்தநாரீஸ்வரர்’ வடிவமாகும். இவ்வடிவம் தொடர்பாக சம்பந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஒரே வடிவத்தில் பெண்ணுருவும் ஆணுருவும் கொண்ட இரு உருவங்களை காட்டுபவர் சிவன் என்பதை,
“ஒருவரை யான்மகள் பாகன்றன்னை யுணர்வால் தொழுதேத்தத்”[41]
“செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக”[42]

"அணியார் மலைமங்கை யாகம் பாகமாய்"[43]
என்ற வரிகளினூடாக விளக்கப்படுத்துகின்றார்.

**07. ஆதிஷேசன் மற்றும் வாயு தேவனின் கதை கூறப்பட்டுள்ளது**

ஆதிஷேசனிற்கும் வாயு தேவரிற்கும் யார் வலிமையில் மிக்கவர் என்ற போட்டி ஏற்பட்ட போது, ஆதிஷேசன் தனது தலைகளால் மேரு மலையை மறைத்து மூடிக் கொள்கின்றது. அப்போது வாயு தேவன் வேகமாக காற்றை வீசியும் ஏதும் செய்ய முடியாது போகவே ஏனைய தேவர்கள் ஆதிஷேசனின் ஆற்றலை புகழ்கின்றனர். அப்போது ஆதிஷேசன் தன் தலைகளில் ஒன்றை சற்று உயர்த்தி பார்க்கும் போது, அந்த சந்தர்ப்பத்தில் வாயு தேவன் வீசிய காற்றினால் மேரு மலையில் இருந்து மூன்று சிகரங்கள் பறந்து சென்றன. அவற்றுள் இரு சிகரங்கள் பாரதத்திலும் ஒரு சிகரம் இலங்கையிலும் விழுந்தது. இலங்கையின் விழுந்த சிகரத்தின் சிறப்பை சம்பந்தர்,
"குன்றின் உச்சி மேல் விளங்கும் கொடிமதிழ் சூழ்இலங்கை"[44] எனப் பாடுகின்றார்.

**08. புலியின் தோலை உரித்த கதை கூறப்பட்டுள்ளது.**

தாருகாவனத்து இருடிகள் யாகத் தீயில் தோன்றிய புலியை சிவபெருமானிற்கு எதிராக ஏவிய போது புலியைக் கொண்டு அதன் தோலை உரித்து தன் ஆடையாக தரித்துக் கொண்டார். இதை சம்பந்தர்,
"சினம் மலி கரி உரிசெய்த சிவன்"[45]
"உடுத்துவதும் புலித்தோல்"[46]
"வேங்கையின்தோல் புடைபட அரைமிசைப் புனைந்தவனே"[47]
"கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்"[48]
"பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்"[49]
என்ற வரியில் புலியின் தோலை உரித்தமை பற்றி கூறியுள்ளார்.

09. **திருமாலிற்கு சக்கரப் படை அருளியமை**

குபன் என்னும் அரசன் காரணமாகத் ததீசி முனிவருடன் போரிட்டுச் சக்கரத்தை இழந்த திருமால், சிவபெருமானை எண்ணி வழிபாடு செய்தார். நாள்தோறும் ஆயிரம் மலர்களால் அர்ச்சனை செய்தார். அவர் தம் அன்பை உலகிற்கு அறிவிக்க எண்ணிய சிவபெருமான் ஒரு நாள் மலரை மறைவாக்கினார். வுழிபாட்டின் போது ஒரு மலர் குறைந்ததால் திருமால் தம் கண்களில் ஒன்றை மலராக இட்டு வழிபட்டார். அதனால் மகிழ்ந்த சிவன் சுதர்சனம் என்னும் சக்கராயுதத்தையும் கண்ணையும் அருளினார். மேலும் சிவபெருமான் திருமாலை தன் ஒரு பாகத்திலும் ஏற்றுக்கொண்டார் எனக் கூறப்படுகின்றது. மேல்வரும் பாடலில் சம்பந்தர் அதை விளக்கியுள்ளார்,
"மாதொரு பாலும் மாலொரு பாலும் மகிழ்கின்ற
நாதனென் றேத்தும் நம்பரன் ரைகுந் நகர்போலும்
மாதவி மேய வண்டிசை பாட மயிலாடப்
போதலர் செம்பொன் புன்னை கொடுக்கும் புறவம்மே"[50]

**10. திருமாலின் அவதாரக் குறிப்புக்கள்**

"எப்போதெல்லாம் உலகில் தர்மம் அழிந்து அதர்மம் தலைதூக்குகின்றதோ, அப்பொழுது அதர்மத்தை அழித்து தர்மத்தை காக்க நான் யுகம் தோறும் அவதரிப்பேன்." என்பது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் கூற்றாகும். திருமாலின் அவதாரங்கள் பத்து எனக் கூறப்படுகின்றது. திருமால் நிகழ்த்திய அவதாரங்களின் குறிப்புக்கள் சம்பந்தரின் தேவாரப்பாடல்களில் காணப்பெறுகின்றன. அந்தவகையில் திருமால் மண்ணையும் விண்ணையும் தம் திருவடியால் அளந்தார் என்பது வாமன அவதாரம் பற்றிய குறிப்பாகும். இதனை திருஞானசம்பந்தர்,
"திருவொளி காணிய பேதுறு கின்ற
திசைமுக னுந்திசை மேலளந்த
கருவரை யேந்திய மாலங்
கைதொழ நின்றது மல்லால்"[51]

### 11. ஏனைய தெய்வங்கள் பற்றிய குறிப்புக்கள்

திருஞானசம்பந்தர் ஏனைய சில தெய்வங்கள் பற்றியும் பாடியிருப்பதைக் காணலாம்,
“பிடி அதன் உருஉமை கொளமிகு கரியது
வகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகு கொடை”[52]
“காரிருளுருவ மால்வரையுரைக்
களிற்ளின துரிவைகொண் டரிவைமேலோடி”[53]
ஆகிய பாடல் வரிகளில் கணபதியின் தோற்றம் குறித்து கூறியிருப்பதைக் காணலாம். மேலும் சம்பந்தர் கணபதியின் தோற்றத்திற்கான காரண் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
“தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதகை யதுஅரு ளினனெழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறை யிறையே”[54]
என்ற பாடலில் பிருதியவிண்டம் முதலான பல்வேறு அண்டங்களில் வாழும் உயிர்கள் யாவும் போகம் நுகர தாம் போகியாயிருந்து உமாதேவியாரோடு பொருந்தினார் என்றும் இதனால் கணபதி தோன்றினார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
“ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவனன்றே”[55]
என்ற வரிகளில் மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மாவைப் பற்றி கூறியுள்ளார். மேலும் சம்பந்தர் தனது பதிகங்களில் ‘நான்முகன்’, ‘பிரம்மன்’, ‘பிரம்மா’, ‘தாமரையான்’ என பல பெயர்களில் பிரம்மதேவரை சுட்டியிருப்பதைக் காணலாம். அத்துடன் மும்மூர்த்திகளின் ஒருவரான திருமால் பற்றி பல இடங்களில் சம்பந்தர் பேசியுள்ளார். திருமாலை ‘கடல் வண்ணன்’, ‘கண்ணன்’, ‘திருமால்’, ‘அயன்’, ‘கரியமால்’ என கூறியுள்ளார்.
“மலர்மகள் கலைமகள் சய மகள்
இனம் மலி புகழ்மகள் இசைதர
இரு நிலன் இடை இனிது அமர்வரே”[56]
என மலர்மகள், கலைமகள், சயமகள், புகழ்மகள் ஆகியோர் குறித்துப் பாடியுள்ளார். மேலும் உமாதேவியாரை ‘பிறை நுதலால்’, ‘தையல்’, ‘செப்பிள முலைநன் மங்கை’, ‘மலைமகள்’ என சுட்டியிருப்பதைக் காணலாம்.
இவ்வாறான முறைகளில் சம்பந்தர் பல இடங்களில் புராணக் கதைகளை கையாண்டு தனது பாடல்களில் பாடியிருப்பதைக் காணலாம். அடுத்து சம்பந்தரின் பதிகங்களில் உள்ள இதிகாசக் கதைகள் பற்றி நோக்குவோம்.

### 01. இராமாயணக் குறிப்புக்கள்

திருமால் தன் அவதாரமாகிய இராம அவதாரத்தில் சிவனை பூஜித்த ஜடாயுவைத் தந்தையாக ஏற்றுக்கொண்டமையையும் சம்பாதியும் ஜடாயுவும் சிவபெருமானை வழிபட்டவர்கள் என்னும் செய்தியையும் சம்பந்தர் புள்ளிருக்குவேளுர்ப் பதிகத்தில் குறிப்பிடுகின்றார்.
“கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடிஎம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்குவேளுரே”[57]
மேலும் அப்பதிகத்தில் ஜடாயு சீதையை மீட்கும் பொருட்டு இராவணனுடன் போர் செய்து இறந்த செய்தியையும் குறிப்பிட்டுள்ளார்.
“தையலாள் ஒருபாகஞ் சடைமேலாள் அவளோடும்
ஐயந்தேர்ந் துழல்வாரோர் அந்தணனார் உறையுமிடம்
மெய்சொல்லா இராவணனை மேலோடி யீடழித்துப்

பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்குவேளூரே.”[58]

இராவணன் சிறந்த ஒரு சிவபக்தனாவான். அவன் ஒரு முறை சிவபெருமான் வீற்றிருக்கும் கையிலை மலையை பெயர்த்தெடுக்க முனைந்தான். அப்பொழுது சிவன் தனது கால் பெருவிரலால் கையிலை மலையை ஊன்றினார். மலையின் அடியில் அகப்பட்ட இராவணன் சாமகானம் பாடி சிவனின் மனதை ஆனந்தப்படுத்தி, வரங்கள் பல பெற்றான். இராவணன் கையிலை மலையை பெயர்த்தெடுக்க முற்பட்ட சம்பவங்களை சம்பந்தர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.
“இலங்கைமனை முடிதோன் இற எழில் ஆர்திரு விரலால்”
“இலங்கை மன்றுவாள் அவுணர் கோனை எழில் விரலால்”
“தலையொரு பத்துந் தடக்கைய திரட்டி
தானுடை யரக்கனொண் கயிலை”[59]
மேலும், இராவணன் சாமகாணம் பாடியதை,
“கரையார்கடல்சூ ழிலங்கைமன்னன் கயிலைமலை தன்னை
வரையார்தோளா லெடுக்கமுடிகள் நெரித்துமனமொன்றி
உரையார்கீதம் பாடநல்ல வுலப்பிலருள் செய்தார்”
“சாம வேதமோர் கீத மோதியத் தசமுகன்”[60]
எனப் பாடியுள்ளார். இராவணன் சாமகானம் பாடியதும் சிவன் இராவணனிற்கு ‘சந்திரகாசம்’ என்னும் வாளை கொடுத்து அருள் புரிந்த செயலையும் சம்பந்தர் பாடியுள்ளார்.
“கடுந்தவா ளரக்கன் கைலையன் றெடுத்த
கரமுரஞ் சிரநெரிந் தலற
அடுத்ததோர் விரலா லஞ்செழுத் துரைக்க
அருளினன் தமிடகு நெடுவாள்”[61]
மேலும், பத்து தலைகள், இருபது கைகள் என இராவணனின் தோற்றம் பற்றியும் சம்பந்தர் பல இடங்களில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.
“தசமுகனது கரம்இரு பதுநெரி தரவிரல் நிறுவிய”
“இருபது தோள்இற ஊன்றி”
“தருவு யர்ந்தவெற் பெடுத்தஅத் தசமுகன்”[62]

அத்துடன், இராவணன் சீதையை கவர்ந்தமை பற்றியும் சம்பந்தர்,
“தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்”[63]
என்று குறிப்பிட்டுள்ளார். இராவணன் பல ஆண்டு காலங்கள் பிரம்மாவை நோக்கி தவமிருந்து வரங்கள் பெற்றமையை,
“அசை உறு தவமுயல் வினில்அயன் அருளினில்”[64]
எனக் குறிப்பிட்டுள்ளமையை காணலாம்.
இராமர் சிவபெருமானை பிரதிஷ்டை செய்து இராவணனைக் கொன்ற தோஷம் நீங்கிட வழிபட்ட இடமே இராமேஸ்வரம். இங்கு எழுந்தருளியுள்ள சுவாமியின் திருப்பெயர் ‘இராமநாதன்’ என்பதாகும். இக்கதையினை சம்பந்தர் மேல்வருமாறு பாடியுள்ளார்,
“மானன நோக்கிவை தேகிதன் னையொரு மாயையால்
கானதில் வவ்விய காரரக் கன்னுயிர் செற்றவன்
ஈனமி லாப்புக ழண்ணல்செய் தஇரா மேச்சுரம்
ஞானமும் நன்பொரு ளாகநின் றதொரு நன்மையே”[65]

### 02. மகாபாரதக் குறிப்புக்கள்

மகாபாரதத்தில் உள்ள சில குறிப்புக்களை சம்பந்தர் தேவாரத்தில் காணலாம். பாண்டவர்கள் மற்றும் திரௌபதை ஆகியோர் வனவாசம் மேற்கொண்ட காலத்தில், அர்ச்சுனன் சிவனை நோக்கி தவம் இருந்து ‘பாசுபதாஸ்திரம்’ என்னும் அஸ்திரத்தை பெற்றான். இதை சம்பந்தர்,

"பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபதம் மீந்துகந்தான்"[66]
எனக் குறிப்பிட்டுள்ளார். அர்ச்சுனன் தவம் செய்யும் போது சிவன் வேடன் வடிவில் உருக்கொண்டு சென்று, அர்ச்சுணனுடன் போரிட்டு பாசுபதாஸ்திரத்தை அருளினார். இதனை சம்பந்தர் திருவெங்குரு என்னும் தலப்பதிகத்தில்,
"வேடனாகி விசையற் கருளிய"[67]
"ஓரியல் பில்லா வுருவம தாகி
யொண்திறல் வேடன துருவது கொண்டு
காரிகை காணத் தனஞ்சயன் தன்னைக்
கறுத்தவற் களித்துடன் காதல்செய் பெருமான்"[68]
என அருளுகின்றார்.

திருமால், கிருஷ்ண அவதாரத்தில் மண்ணை உண்டு தாயின் முன்னிலையில் வாய்திறந்து உலகையே உள்ளிருத்திக் காட்டினார் என்று கூறுவர். இக்கருத்தினை சம்பந்தர் திருவிஜயமங்கைத் தேவாரத்தில்,
"மண்ணினை யுண்டவன் மலரின் மேலுறை
அண்ணல்கள் தமக்களப் பரிய அத்தனூர்"[69] என விளக்கி அருளுகின்றார்.

கிருஷ்ணர் கோவர்த்தனக்கிரி என்னும் மலையை தன் ஒற்றை விரலால் குடையாகப் பிடித்த கதையை சம்பந்தர் திருப்பிரம்மபுரம் என்னும் தேவாரத்தில்,
"விலங்கலொன் றேந்திவன் மழைதடுத் தோனும்
வெறிகமழ் தாமரை யோனுமென்றிவர்தம்
பலங்களால் நேடியும் அறவரி தாய
பரிசினன் மருவிநின் றினிதுறை கோயில்"[70]
எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான முறைகளில் சம்பந்தர் பல இடங்களில் இதிகாசக் கதைகளை கையாண்டு தனது பாடல்களில் பாடியிருப்பதைக் காணலாம்.

**முடிவுரை**

மேற்குறிப்பிட்ட விடயங்களை வைத்து நோக்கும் போது, திருஞானசம்பந்தர் தனது தேவாரப் பதிகங்களில் பல இடங்களில் புராண இதிகாசக் கதைகளை கையாண்டுள்ளமையை காணலாம். சிவபுராணத்தில் அடங்கும் சிவனின் அட்டவீரச்செயல்கள் பற்றி கூறிய சம்பந்தர் தக்கன் வேள்வியை சிவன் தகர்த்திய கதை, பிரம்மனின் சிரத்தை அறுத்த கதை, திரிபுரம் எரித்த கதை ஆகியவற்றினை அதிகமாகப் பாடியிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது. அதிலும் குறிப்பாக தக்கனின் வேள்வியை தகர்த்திய கதை பல இடங்களில் பேசப்பட்டுள்ளது. சிவன் கங்கையை சடையில் வைத்தமையால் 'கங்காதரர்' என்றும் சிவனை அழைப்பர். சிவபுராணத்தில் அடங்கும் இக்கதையை சம்பந்தர் பல இடங்களில் சிவனை விழித்துக் கூற கையாண்டுள்ளமையை காணலாம்.

அடிமுடி தேடிய கதை, அறமுரைத்த கதை, நஞ்சுண்ட கதைகளை வைத்து நோக்கும் போது, சிவனின் மேலான தன்மையை வெளிப்படுத்த இக்கதைகளை சம்பந்தர் கையாண்டுள்ளார் எனலாம். மும்மூர்த்திகளில் சிவனே மேலானவர் என்பதை அடிமுடி தேடிய கதையின் மூலமும் தேவ அசுரர்களோடு உலகையும் சிவன் காத்துள்ளார் என்பதை நஞ்சுண்ட கதையின் மூலமும் சிவபெருமான் சிறந்த ஞானகுரு என்பதை அறமுரைத்த கதையின் மூலமும் வெளிப்படுத்தியுள்ளார்.

திருமுறைகள் சைவசமயத்தின் கருவூலங்களாக விளங்கிய போதும் பிற தெய்வங்களை போற்றாமல் இல்லை. அந்தவகையில் சம்பந்தர் சிவனை பற்றி கூறியதோடு பிரம்மா, திருமால், கலைமகள், திருமகள், மலைமகள், கணபதி எனப் பலரையும் போற்றியுள்ளார். இத்தெய்வங்களிற்கு தனித்தனிப் பாடல்கள் பாடவில்லை எனினும் அவர்களைக் குறித்துப் போற்றத் தவறவில்லை. சிவனின் சிறப்பை கூறுவதோடு ஏனைய தெய்வங்களையும் அவருடன் இணைத்துப் பாடியுள்ளார். மேற்குறிப்பிட்ட தெய்வங்களைப் பற்றிக் கூறி அவர்களுள் சிவன் சிறப்பானவர் என சம்பந்தர் கூற விழைவதைக் காணலாம். திருமாலிற்கு சக்கரப் படை அருளியமை, கணபதியை

தோற்றுவித்தமை, பிரம்மாவிற்கும் திருமாலிற்கும் அறிய முடியாத சோதிப் பிளம்பாய் இருந்தமை போன்ற கதைகளின் ஊடாக சிவனின் மேலான தன்மையை வெளிப்படுத்துகின்றார்.

சம்பந்தரின் தேவாரப் பதிகங்களில் உள்ள இதிகாசக் கருத்துக்கள் பற்றி நோக்கினால், இதிகாசங்களிலே இராமாயணத்தில், இராவணன் கைலையை பெயர்த்து எடுக்க முற்பட்ட சம்பவம் அதிகமாக சம்பந்தரின் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளது. சிவன் இசைப் பிரியனாவார். அதற்கு சிறந்த உதாரணமாக இராவணன் சாமகானம் பாடி சிவனை மகிழ்வித்து வரங்கள் பெற்றதை சம்பந்தர் பல இடங்களில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அத்துடன், இராமனின் பிரம்மஹஸ்தி தோசத்தை சிவனே நீக்கினார் என சிவனின் மேன்மையை முதன்மைபடுத்தியுள்ளார். மகாபாரதத்திலே, அர்ச்சுனனிற்கு பாசுபதாஸ்திரம் வழங்கிய கதைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் திருமாலின் அவதாரமாகிய கிருஷ்ண அவதாரம் பற்றியும் சம்பந்தர் சில இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அந்தவகையில் சம்பந்தரின் தேவாரத்தில் இதிகாசங்களை பொருத்தவரையில் இராமாயண கதைகளே அதிகமாக இடம்பெற்றுள்ளமையை காணலாம். இராவணன் தீய குணம் கொண்ட அரக்கனாக இருப்பினும் சிறந்த ஒரு சிவபக்தன் என்பதை அதற்கு காரணமாகக் கூறலாம்.

புராணங்களை தனது பதிகங்களில் கையாண்டதைப் போல சம்பந்தர் இதிகாசங்களை வெகுவாக கையாளவில்லை என்றே கூறவேண்டும். ஏனெனில் புராணங்கள் சிவனின் புகழை கூறுவதாகவும் இதிகாசங்கள் விஷ்ணுவின் புகழை கூறுவதாகவும் அமைகின்றன. எனவே திருஞானசம்பந்தர் தனது திருப்பதிகங்களில் சிவனின் புகழை கூற முற்பட்டதால் இதிகாசங்களில் சிவனின் பெருமைகள் இடம்பெறும் பகுதிகளை மாத்திரம் வெகுவாகக் கையாண்டிருப்பதைக் காணலாம்.

**அடிக்குறிப்புகள்**

1. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 86.
2. மேலது, ப. 205.
3. மேலது, ப. 172.
4. மேலது, ப. 201.
5. மேலது, ப. 288.
6. மேலது, ப. 284.
7. மேலது, ப. 40.
8. மேலது, ப. 182.
9. மேலது, ப. 276.
10. ராமநாதன், அரு., 1996, சிவம்மஹா புராணம், ப. 124.
11. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 103.
12. மேலது, ப. 170.
13. மேலது, ப. 276.
14. ராமநாதன், அரு., 1996, சிவம்மஹா புராணம், ப. 124.
15. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 179.
16. மேலது, ப. 184.
17. மேலது, ப. 201.
18. மேலது, ப. 103.
19. மேலது, ப. 175.
20. மேலது, ப. 200.
21. மேலது, ப. 273.
22. மேலது, ப. 168.
23. மேலது, ப. 99.

24. ராமநாதன், அரு., 1996, சிவம்மஹா புராணம், ப. 124
25. மேலது, ப. 124.
26. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 258.
27. மேலது, ப. 288.
28. மேலது, ப. 184.
29. மேலது, ப. 283.
30. மேலது, ப. 65.
31. மேலது, ப. 24.
32. ராமநாதன், அரு., 1996, சிவம்மஹா புராணம், ப. 125.
33. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 41.
34. மேலது, ப. 64.
35. மேலது, ப. 280.
36. மேலது, ப. 272.
37. மேலது, ப. 172.
38. மேலது, ப. 200.
39. ராமநாதன், அரு., 1996, சிவம்மஹா புராணம், ப. 125.
40. மேலது, ப. 125.
41. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 272.
42. மேலது, ப. 174.
43. மேலது, ப. 87.
44. ராமநாதன், அரு., 1996, சிவம்மஹா புராணம், ப. 126.
45. அறநெறிப்பிரிவு (தொகுப்பு), 2009, பன்னிரு திருமுறைகள், ப.69.
46. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 167.
47. மேலது, ப. 200.
48. மேலது, ப. 288.
49. மேலது, ப. 75.
50. அறநெறிப்பிரிவு (தொகுப்பு), 2009, பன்னிரு திருமுறைகள், ப.72.
51. மேலது, ப. 75.
52. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 109.
53. மேலது, ப. 82.
54. மேலது, ப. 109.
55. மேலது, ப. 33.
56. அறநெறிப்பிரிவு (தொகுப்பு), 2009, பன்னிரு திருமுறைகள், ப. 69.
57. மேலது, ப. 73.
58. மேலது, ப. 73.
59. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 288.
60. மேலது, ப. 179.
61. மேலது, ப. 285.
62. மேலது, ப. 171.
63. அறநெறிப்பிரிவு (தொகுப்பு), 2009, பன்னிரு திருமுறைகள், ப. 73.
64. ராமநாதன், அரு., 1996, சிவம்மஹா புராணம், ப. 126.
65. அறநெறிப்பிரிவு (தொகுப்பு), 2009, பன்னிரு திருமுறைகள், ப. 73.
66. சுப்பிரமணியன், ச.வே., 2007, பன்னிரு திருமுறைகள், ப. 72.
67. மேலது, ப. 280.
68. அறநெறிப்பிரிவு (தொகுப்பு), 2009, பன்னிரு திருமுறைகள், ப. 75.
69. மேலது, ப. 77.
70. மேலது, ப. 76.

**உசாத்துணைகள்**

1. இரத்தினசபாபதி, வை., (1981),*திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு – முதற் பகுதி*, மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம் சென்னைப் பல்கலைக்கழகம்.

2. இரத்தினசபாபதி, வை., (1982),*திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு – இரண்டாம் பகுதி*, மெய்யுணர்வு மேல்நிலைக் கல்வி நிறுவனம் சென்னைப் பல்கலைக்கழகம்.

3. இராசசுப்பிரமணியம், வ., த., (1994),*பன்னிரு திருமுறைகள் - முதல் திருமுறை*, தமிழ் நிலையம் ஏ. ஆர். ஆர். காம்ப்ளெக்ஸ் 141, உஸ்மான் சாலை. தி. நகர், சென்னை – 600 017.

4. சுப்பிரமணியன், ச.வே., (2007), பன்னிரு திருமுறைகள், மணிவாசகர் பதிப்பகம் 31 சிங்கர் தெரு பாரிமுனை - சென்னை.

5. ஞானசம்பந்தன், அ. ச., ஞானசுந்தரம், தெ., (2002),*கம்பராமாயணம்*, கங்கை புத்தக நிலையம் 13, தீனதயாளு தெரு தியாகராய நகர், சென்னை – 600 017.

6. ராமநாதன், அரு., (1996),*சிவம்மஹா புராணம்*, 35, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம் சென்னை – 600 024.

7. வேங்கடசாமி, சு., (2007),*திருஞானசம்பந்தர்*, எம். கே. என்டர்பிரைஸஸ், சென்னை.

8. வேலுப்பிள்ளை, ஆ., (2011),*தமிழர் சமய வரலாறு*, குமரன் புத்தக இல்லம் கொழும்பு – சென்னை.

9. மனோகரன், த., (2007),*இந்து நாகரிகம்*, அகில இலங்கை இந்து மாமன்றம்.